**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 410/2019**

**03.07.2023 வா.சா.2 திருமதி. மாரியம்மாள்**

**2 முதல் 4 , 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கை என் தாயார் வசந்தா தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் தற்போது என் வீட்டுக்காருடன் வசிக்கிறேன் என்றால் என் கணவர் இறந்துவிட்டார் நான் என் தாயார் வீட்டில் தான் வசிக்கிறேன். என் தாயார் வீட்டின் முகவரி எண்.1, வடக்குதெரு, வண்ணாரபேட்டை. எனக்கு எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்க மூலம் மற்றும் பிராதில் என்னுடைய முகவரியாக 16 இ என்ற எண் கொண்ட வீடு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது என் தாயார் பிறந்த வீடு. நான் எண்.1 கொண்ட வீட்டில் வசிக்கவே இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2 என் தாயார் இறந்தபிறகு நாங்கள் அவரது வாரிசு என்ற அடிப்படையில் மனு தாக்கல் செய்து இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த சீர்திருத்த பிராதில் எங்களையும் பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளோம், அவர்கள் எங்களையும் இடையூறு செய்கிறார்கள். என்னுடைய சீர்திருத்த பிராதில் பிரதிவாதிகள் எங்களை இடையூறு செய்வதாக குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் தாக்கல் செய்த பிராதில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான், என் தாயார் சொல்லியும் தெரியும். என் தாயார் 6 ம் பிரதிவாதி மற்றும் 11 நபர்கள் மீது ஏற்கனவே அசல் வழக்கு எண் 643/2007 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான், ஆனால் அந்த வழக்கு இந்த வழக்கு மூலத்திற்காக தாக்கல் செய்த வழக்கு இல்லை.

3. அசல் வழக்கு எண். 643/2007 லில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும் இந்த வழக்கில் உள்ள சொத்தும் ஒரே சொத்தா என்றால் சரியல்ல. என் தாயார் ஏற்கனவே அசல் வழக்கு எண் 643/2007 லில் இதே பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கு முழுமையான விசாரணைக்கு பிறகு 18.09.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பாணைக்கு எதிராக என் தாயார் இது நாள் வரை எவ்வித மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்643/2007 ன் தீர்ப்பு

தடை தோஷத்தால் வழக்கை கட்டுப்படுத்தும் என்றாலும் இந்த வழக்கு முன் தீர்ப்பு த டை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அர்சுணன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்கு மூலத்தை என் வழக்கறிஞர் தயார் செய்து வைத்ததில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் பத்தி 13 ல் அசல் வழக்கு எண்.643/2007 பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 11 செண்ட் என்றால் சரிதான். முந்தைய வழக்கில் என் தாயார் 1 ஏக்கர் 5 செண்டுக்கு பரிகாரம் கோரியிருந்தார் என்றால் சரியல்ல. தற்பொழுது எவ்வளவு இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 56 செண்ட்.

4. தாவா சொத்தை என் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 14 வரையான ஆவணங்களில் தாவா சொத்து என் தாத்தா, பூட்டனாருக்கு பாத்தியப்பட்டதை காட்டக்கூடிய ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் அடங்கல் , தீர்வை ரசீது ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 14 ஆவணங்களில் அடங்கல் மற்றும் தீர்வை ரசீது இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.190/2 நிலத்தை அரசு கையகபடுத்தி 1994 லேயே வீட்டு மனைகளாக பிரித்து பயனாளிகளுக்கு கொடுத்து விட்டது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் தான் இந்த 3 ம் பிரதிவாதி ஐய்யப்பன் 28.12.2011 ல் மனை எண். 53, 54 கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவரது நிலம் சர்வே எண். 190/2 ல் இல்லை. 4 ம் பிரதிவாதி முத்துக்குட்டி 15.06.2013 ல் மனை எண். 32 கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதி மனை எண் 13 மற்றும் 14 கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து 100 வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்ய உபயோகமற்றதாக இருந்த நிலத்தை நாங்கள் விளைநிலமாக மாற்றியுள்ளோம் என்பது வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முந்தை வழக்கிலும் என் தாயார் இந்த வழக்கில் சொல்லியுள்ள அதே சங்கதிகளைத்தான் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ஆரம்ப காலத்திலேயே அரசாங்கம் 1 ஏக்கரை தனியாக பிரித்துவிட்டது என்றாலும் 1994 லில் மீத முள்ள 1 ஏக்கர் 5 செண்ட் நிலத்தை 60 பட்டாத்தாரர்களுக்கு வழங்கிவிட்டது என்றாலும் சரியல்ல. முந்தைய வழக்கில் துணை வட்டாட்சியர் சாட்சியாக விசாரிக்கப்பட்டு 60 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை மட்டும் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால்

சரியல்ல. தாவா சொத்து எங்களது அனுபவத்தில்உ ள்ளது என்பதை காட்ட எந்த தீர்வை ரசீதும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து சர்வே எண்.190/2 வீடு கட்டும் மனைகளாக பிரிக்கப்பட்டு மனைகளாக உள்ளது என்றாலும் அது விவசாய நிலமாக இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ளபரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும். என்னுடைய வழக்கு முன் தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.